## கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்

பி.வா.சா.1 – முருகன் OS.No.25 /2021 நாள் : 25.09.2025

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் 12ம் வகுப்பு படித்திருக்கிறேன். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்கள் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிராமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் நான் சொல்லிதான் எனது வழக்கறிஞருக்கு தெரியும் என்றால் சரிதான். நானும் 2ம் வாதியும் Sri ram City Union Finance கம்பெனியில் 3 வருடங்கள் பணியாற்றினோம். நாங்கள் ஒன்றாக வேலை பார்க்கும்போதுதான் எனக்கும் 2ம் வாதிக்கும் பழக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான். 3 வருடங்கள் வேலை பார்த்தபிறகு அந்த கம்பெனியில் வெளியேறிவிட்டேனா என்றால் 2012 வருடம் வரை பணியாற்றினேன். அதன்பிறகு நான் எங்கும் வேலைக்கு சேரவில்லையா என்றால் திருப்பூரில் கார்மெண்ட்ஸ் கம்பெனியில் வேலை பார்த்தேன். நான் அனுப்பியுள்ள வழக்கறிஞர் அறிவிப்பிள் காவல் ஆணையர் திருச்சி, காவல் துறை தலைவர் சென்னை காவல் ஆய்வாளர் மாவட்ட குற்ற பிரிவு அரியலூர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரியலூர் ஆகிய இடங்களுக்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட அறிவிப்பை நான் ஏன் வாதிகளுக்கு எதற்காக அனுப்பவில்லை என்றால் எனது வழக்கறிஞர்தான் அறிவிப்புகளை அனுப்பியுள்ளார், 1,2 வாதிகளுக்கு ஏன் அனுப்பவில்லை என்று எனக்கு தெரியவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பில் இணைப்பில் குறிப்பிட்டுள்ள ஜெயங்கொண்ட காவல் நிலையம் மற்றும் அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோரிடம் கொடுத்த புகார் மனுக்களின் நகல்களை

நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அனுப்பியுள்ள பி.வா.சா.ஆ.1 ஆன வழக்கறிஞர் அறிவிப்பில் வாதிக்கும் 2ம் வாதிக்கும் எனக்கும் 3 வருட காலமாக பணம் கொடுக்கல் வாங்கல் உண்டு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரையில் எனக்கும் 2ம் வாதிக்கும் எந்தவித பண கொடுக்கல் வாங்கலும் இல்லை என்று சொல்லியுள்ளது தவறா என்றால் பணத்தை நான் திருப்பி கொடுத்துவிட்டேன். 28.06.2016 முதல் 03.08.2018 வரையிலான காலத்தில் 67 தவணைகளில் ரூபாய் 14,50,000/- பணத்தை 1,2 ம் வாதிகளின் வங்கி கணக்கில் இருந்து எனது வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அதனை எடுத்து நான் 2ம் வாதியின் அப்பாவிடம் கொடுக்க சொன்னதால் எடுத்துக்கொடுத்தேன். நான் அவர்கள் எனது வங்கி கணக்கில் போட்ட 67 தவணை தொகையையும் அவர்கள் போட்ட அந்தந்த தேதியிலேயே எடுத்து 2ம் வாதியின் அப்பாவிடம் கொடுத்துவிட்டேன். நான் நிதி நிறுவனத்தில் வேலை செய்ததால் பொதுவாக ஒரு நபர் தனது ஆதார் அட்டை மற்றும் பான் கார்டு முதலானவற்றை கொடுக்கும்போது எத்தனை வங்கி கணக்கு வேண்டுமானாலும் தொடங்கலாம் என்றால் சரிதான். 22.02.2018 அன்று ரூபாய் 4,65,000/- பணம் வாதிகள் கணக்கில் இருந்து எனது வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிகளுக்கு வட்டி பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் நான் அவர்களிடம் இருந்து எந்த பணமும் வாங்கவில்லை, 2ம் வாதியின் அப்பா என்னிடம் பணம் கொடுத்து அதனை எனது வங்கி கணக்கின் மூலமாக 1,2 வாதிகளின் வங்கி கணக்கிற்கு செலுத்த சொன்னதால் நான் செலுத்தியுள்ளேன். நான் மேற்படி சொன்ன

விவரங்களுக்கு ஆதரவாக நான் எனது வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ளார்கள். 2ம் வாதியின் அப்பாவிற்கு நான் பணம் எடுத்து கொடுத்ததாக சொல்லும் விவரத்தை நான் எனது எதிர்வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன். 2ம் வாதி தனது அப்பாவிற்காக எனது வங்கி கணக்கிற்கு அனுப்பிய தொகையை 2ம் வாதியின் அப்பாவிற்கு எடுத்துக்கொடுத்ததற்கான எழுத்துப்பூர்வமான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் வாதியின் தந்தைக்கான தொகையை ஏன் எனது வங்கி கணக்கில் போட்டு அவருக்கு எடுத்துக்கொடுக்க சொன்னார்கள் என்றால் 2ம் வாதியின் அப்பாவிற்கு கனரா வங்கியில் கணக்கு இருக்கிறது, அவருக்கு நகைகடன் இருப்பதால் 2ம் வாதி எனது வங்கி கணக்கில் போட்டு அவருக்கு எடுத்துக்கொடுக்க சொன்னார். ஜெயங்கொண்டத்தில் மொத்தம் 10 வங்கிகள் இருக்கின்ற நிலையில் 2ம் வாதி எனது வங்கி கணக்கிற்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்றும், 2ம் வாதியின் அப்பா மேற்படி ஊரில் உள்ள வேறு வங்கிகளில் வேறு வங்கி கணக்கை தொடங்கியிருக்கலாம் என்றும் சொன்னால், அதை தான் நான் 2ம் வாதியிடம் கேட்டேன். அப்போது அவர் கோயம்புத்தூரில் இருந்தார் அதற்கு அவர் தனது சொந்தகாரர்களின் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்ப விரும்பவில்லை என்று கூறினார். 2ம் வாதியின் அப்பாவிற்கு வேறு வங்கியில் கணக்கு இருக்கு என்றும், 2ம் வாதி அந்த வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியிருக்கலாம் என்றும், எனது வங்கி கணக்கிற்கு அனுப்ப

வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்திலும், எதிர் வழக்குரையிலும் சொல்லியுள்ளதுபோல் 2ம் வாதியின் தந்தை என்ன பெயரில் கடை வைத்து தச்சு தொழில் நடத்தி வருகிறார் என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, அந்த கடையின் பெயரைகூட நான் எனது பிரமாண வாக்குமூலத்திலும், எதிர் வழக்குரையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், அதனை அவர் என்னிடம் சொல்லவில்லை. நான் சொல்வதுபோல் 2ம் வாதியின் அப்பா மேற்சொன்னதுபோல் எந்த தொழிலும் செய்யவில்லை என்றும், அவர் 70 வயதிற்கும் மூத்தவர் என்பதால் அவரால் தொழில் செய்ய முடியாது என்றால் சரியல்ல. அவர் தொழில் செய்யவில்லை, நான்கு பேர் தொழிலாளர்களை வைத்து வேலை வாங்கி தொழில் செய்து வருவதாகவும், மரச்சாமான்களை கோயம்புத்தூருக்கு ஏற்றுமதி செய்து வருவதாகவும் கூறினார். 2ம் வாதியிடம் இருந்து நான் பெற்ற தொகையை ஏமாற்றும் பொருட்டு 2ம் வாதியின் அப்பாவிற்கு எடுத்துக்கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், அதன்காரணமாகதான் 2ம் வாதியின் அப்பா என்ன பெயரில் தொழில் செய்கிறார் என்ற விவரம்கூட எனக்கு தெரியவில்லை என்றாலும், அதனை நான் குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை என்றாலும், அதற்கான ஆவணங்களையும் என்னால் தாக்கல் செய்ய முடியவில்லை என்றாலும் சரியல்ல. 2ம் வாதி எங்கள் நிறுவனத்தில் வேலை செய்யும் போது அந்த கம்பெனியில் மேலாளர் பொருப்பில் உள்ள ஒரு ஆண் நபருடன் 2ம் வாதி தவறான பழக்கத்தில் தொடர்பில் இருந்தார் என்று சொல்லியுள்ள விவரத்தை நான் தாக்கல் செய்துள்ள எனது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால்

சரிதான், எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன். எதிர் வழக்கைுரையிலும் நான் தாக்கல் செய்துள்ள நிறுபண வாக்குமூலத்திலும் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளதுபோல் வாதிகள் போன் மூலம் வட்டி கேட்டு மிரட்டினார் என்று சொல்லியுள்ள நிலையில் வழக்கறிஞர் அறிவிப்பில் அந்த போன் நம்பர் பற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ஆனால் நம்பர் உள்ளது. என்னை வட்டி கேட்டு மிரட்டியது தொடர்பான விவரங்களை நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் அது பற்றி எனது வழக்கறிஞருக்குதான் தெரியும் நான் அதை பார்க்கவில்லை, மொத்த பணத்தையும் நான் திருப்பி கொடுத்தபிறகுதான் மீண்டும் பணம் கேட்டு பிரச்சனையை ஆரம்பித்தார்கள். நான் 2ம் வாதியை பற்றி கூறிய தவறான தொடர்புகள் குறித்த தகவல்களை எனது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வாதிகளிடம் எனக்கு இருந்த பழக்கத்தின் அடிப்படையில் 2ம் வாதியிடம் இருந்து பணம் பெற்றுக்கொண்டு அவர் ஒரு பெண் என்று பாராமல் அவர் மீது அவதூறான கருத்துக்களை சாட்சியமாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒப்பம்.திருமதி.M.S.மணிமேகலை,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
அரியலூர்.